# 2022ம் ஆண்டிற்கான வழங்குநர்களையும், நிர்மாணதாரர்களையும் பதிவு செய்தல்
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திற்கும், கீழ் குறிப்பிடப்படும் 15 பிரதேச செயலகங்களுக்கும் 2022ம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் வடபிராந்தியத்திலுள்ள தரம் வாய்ந்த வழங்குநர்கள், மற்றும் நிர்மாணதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 2. நல்லூர். | 3. தெல்லிப்பளை | 4. வேலணை |
| 5. உடுவில் | 6. சண்டிலிப்பாய் | 7. சங்கானை | 8. கோப்பாய் |
| 9. கரவெட்டி | 10. பருத்தித்துறை | 11. சாவகச்சேரி | 12. மருதங்கேணி |
| 13. ஊர்காவற்றுறை | 14. காரைநகர் | 15. நெடுந்தீவு | |

## 01. பொதுவான நிபந்தனைகளும் அறிவுறுத்தல்களும்

1. இவ் வழங்குநர்களையும் நிர்மாணதாரர்களையும் பதிவு செய்தலானது 2022ம் ஆண்டுக்கு மட்டும் செல்லுபடியாகும்.

2. பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / நிர்மாணதாரர்களிடமிருந்து விலைமனு கோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலை மனு கோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு / வேலை வழங்குநர்க்கு உண்டு.

3. விண்ணப்பங்களைப் பதிவுசெய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டிற்கும் உட்படுத்தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. யாழ் மாவட்டத்தில் குறைந்தது ஒரு இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் கிளை / காட்சியறை / முகவர் ஆகியவற்றில் ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.

5. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / நிர்மாணதாரர்கள் விலை மனு கோரப்படும் போது அதனைக் கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகளுக்கு ஒத்துப்போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குநர்கள் / நிர்மாணதாரர்கள் எதிர்காலத்தில் விலை மனு கோரப்படும்போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.

6. பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பப்படிவத்தினை காரணம் ஏதும் முன்வைக்காது ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ அரசாங்க அதிபர் அவர்களுக்கு உரிமை உண்டு

7. முடிவுத் திகதிக்கு **(2021.12.09)** பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

8. மேலதிக விளக்கங்களுக்கு <u>www.jaffna.dist.gov.lk</u> எனும் இணையத் தளத்தில் அல்லது **"பெறுகை அலகு, யாழ் மாவட்டச் செயலத்துடன்** நேரடியாகவோ, அல்லது **0212214633** எனும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பினை மேற்கொண்டு விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## 02. வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்குரிய மேலதிக நிபந்தனைகள்

1 வியாபாரப் பதிவில் குறிப்பிடப்பட்ட வியாபாரத் தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள பொருட்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும்.

2 வழங்குநர்களுக்கு பெறுகைக்கான முற்பணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

3 விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
- உள்ளூர் அதிகார சபையினால் வழங்கப்பட்ட 2021ம் ஆண்டிற்கான வியாபார உரிமத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி

4 ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், பதிவுக் கட்டணமும் தனித்தனியாக செலுத்தப்பட வேண்டும்.

| தொகுதி இல | பொருட்கள் / வேலைகள் / சேவைகளின் விபரம் | தொகுதி இல | பொருட்கள் / வேலைகள் / சேவைகளின் விபரம் |
|---|---|---|---|
| G-01 | காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள். | G-02 | கணனிகள் அச்சிடும் உபகரணங்கள், தகவல் தொழில்நுட்பசாதனங்கள் மற்றும் இலத்திரனியல் நுகர்வுப் பொருட்கள் |
| G-03 | அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள் | G-04 | இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள் |
| G-05 | இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும் | G-06 | மோட்டார் வாகனங்ளின் உதிரிப்பாகங்கள் |
| G-07 | விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் | G-08 | காலை மதிய மற்றும் இரவு உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள் |
| G-09 | பலசரக்கு, சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | G-10 | அழகுசாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக், தோல் உற்பத்திகள் மற்றும் சமையல் உபகரணங்கள் |
| G-11 | கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைகளுக்கான மூலப்பொருட்கள் | G-12 | துணிவகைகள் |
| G-13 | தளபாடங்கள் | G-14 | விவசாயப் பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள், |
| G-15 | மீன்பிடி உபகரணங்கள் | G-16 | மருந்துப் பொருட்களும் உபகரணங்களும் |
| G-17 | சூரிய மின்கலம் மற்றும் திருத்தங்கள் | G-18 | நீர் சுத்திகரிப்பு இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| W | கட்டடம், பெருந்தெருக்கள், பாலங்கள், நீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றல், நீர்ப்பாசனம் மற்றும் வடிகால்வாய்கள், தூர்வாரல் மற்றும் பண்படுத்தல், மழைநீர் அகற்றல் மற்றும் நில வடிகால் அமைப்பு, கடலசார் கட்டுமானம், மின் இணைப்பு வேலைகள், அலுமினிய பிரிப்பு, பொருத்து வேலைகள் மற்றும் மர வேலைகள், கட்டடங்களுக்கு வர்ணம் பூசுதல். | | |
| S-01 | சுத்திகரிப்பு சேவை | S-02 | பாதுகாப்பு சேவை |
| S-03 | பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவை | S-04 | படப்பிடிப்பு சேவை |
| S-05 | குளிரூட்டிகள்,வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | S-06 | போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள்,கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்புமுறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV திருத்துதல் மற்றும் பராமரித்தல் |
| S-07 | வாடகைக்குமற்றும் குத்தகைக்கு வாகனம் வழங்கல் | S-08 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் |
| S-09 | இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | S-10 | வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல் |
| S-11 | தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | S-12 | ஏனைய சேவைகள் |

## 03. நிர்மாணதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்குரிய தகைமைகள்

1. CIDA நிறுவனத்தில் நிர்மாணதாரர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் ரூபா 10,000,000/= (ரூபா பத்து மில்லியன்) வரையிலான சிறிய நிர்மாண வேலைகளின் பொருட்டு தம்மைப் பதிவு செய்து கொள்ளத் தகுதியுடையோராவார். **அத்துடன் பதிவு செய்து கொண்டுள்ள சங்கங்கள் ரூபா 2,000,000/= (ரூபா இரண்டு மில்லியன்) பெறுமதியான நிர்மாண வேலைகளைச் செய்யும் தகுதியைக் கொண்டிருக்கும்.**
2. ICTAD இல் பதிவு செய்யப்பட்ட நிர்மாணத் தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள சேவைகளுக்கு மட்டுமே நிர்மாணதாரர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும்.
3. தகைமைகளையும், உடமைகளையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (வியாபார பதிவுச் சான்றிதழ், ICTAD புத்தகத்தின் முதற்பக்கமும், பதிவு பக்கமும் ஆகியவற்றின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.)

## 04. விண்ணப்பப் படிவம் பதிவு செய்தலும் கட்டண விபரங்களும்

1 பதிவுக்கான விண்ணப்பங்கள் யாவும் மாவட்டச்செயலக பெறுகை அலகில் நேரடியாகவோ அல்லது எமது இணையத்தளத்தினூடாகவோ அல்லது முத்திரையிடப்பட்டு சுயவிலாசம் எழுதப்பட்ட கடித உறையை அனுப்புவதன் மூலமோ பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் 2021ஆம் ஆண்டிற்கான வியாபார உரிமத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்பட்டு **2021.12.09**ந் திகதிக்கு முன்பாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் (அறை இல. 42) நேரடியாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களிற்குரிய தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"2022ம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களைப் பதிவு செய்தல்"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

2 மீளளிக்கப்படாத வைப்புப் பணத்தினை "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்தில் பணமாக வைப்பில் இட வேண்டும். வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச்சிட்டையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

3 **வழங்குநர்களைப் பதிவு செய்தலுக்குரிய கட்டண விபரங்கள்**

பொருள்கள் சேவைகள் வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்கு ஒர் தொகுதிக்கான மீளளிக்கப்படாத வைப்புத் தொகை ரூபா 500.00 ஆகும்

**கட்டிட நிர்மாணதாரர்களைப் பதிவுசெய்தலுக்குரிய கட்டண விபரங்கள்**

கட்டிட நிர்மாணதாரர்கள் பதிவுகளை மேற்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கீழ்க்காணும் தொகைகளை செலுத்துதல் வேண்டும் பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 க்கு அதிகமானதும் ரூபா 5,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 க்கு அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

க. மகேசன்,
மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர்
யாழ் மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

| அலுவலக உபயோகத்திற்கு | JK/SUP/ /2022 |
|---|---|

# விண்ணப்பப் படிவம்
## 2022ஆம் ஆண்டிற்கான வழங்குநர்கள் மற்றும் நிர்மாணதாரர்களைப் பதிவு செய்தல்
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

01. வியாபார நிறுவனத்தின் பெயர் : ........................................................................................................
02. வியாபார நிறுவனத்தின் முகவரி : ........................................................................................................
03. உரிமையாளரின் பெயர் : ..........................................................................................................
04. தே.அ.அ.இலக்கம் : ..........................................................................................................
05. வியாபார பதிவிலக்கமும் திகதியும் : ..........................................................................................................
(பதிவுப்பிரதியின் நிழற்பிரதி இணைக்கப்படல் வேண்டியது அவசியமானது)
06. (I) தொலைபேசி இல :.......................................................................................
(II) கையடக்க தொலைபேசி இல :...................................................................
(III) தொலைநகல் இல :.................................................................
(IV) மின்னஞ்சல் முகவரி :..................................................................
07. வியாபாரத்தின் தன்மை :-.................................................................
08. பதிவு செய்யப்படவேண்டிய பொருட்கள் /வேலைகள் / சேவைகளின் தொகுதி
(வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களில் விடயம் 2:4 ஐப் பார்க்கவும்)

| தொகுதி இல | பொருட்கள் /வேலைகள் / சேவைகள் விபரம் |
|---|---|
| | |

09. வருமான வரி செலுத்துபவராக இருப்பின் அதன் விபரங்கள்
..........................................................................................................................................
10. முகவராக இருப்பின் அவை தொடர்பான விபரங்கள் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
..........................................................................................................................................
11. VAT, NBT இலக்கம் இருப்பின் அதன் விபரம் (ஆவணங்களின் நிழற்படப்பிரதியுடன்)
..........................................................................................................................................

என்னால் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை எனவும், அரசாங்க அதிபர் அவர்களால் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக பொருட்கள் / வேலைகள் / சேவைகளை வழங்குவதற்கும் உறுதியளிக்கின்றோம். பதிவுக் கட்டணம் ரூபா ............. வினை 2021/..../.....ந் திகதி .......................... இலங்கை வங்கிக் கிளையில் வைப்புச் செய்து அதற்கான வைப்புச் சிட்டை இதனுடன் இணைத்து அனுப்பப்படுகின்றது.

| ............................. | .................................... | ..................... |
|---|---|---|
| விண்ணப்பதாரியின் ஒப்பம் | பெயர் | திகதி |
| (உத்தியோக பூர்வ முத்திரை) | | |

JK / PROC / SUP /11/06/ 2021

# சேவைகள்

| தொகுதி இல | விபரம் | சேவைகள் (Services) |
|---|---|---|
| S-01 | சுத்திகரிப்பு சேவைகள் | |
| S-02 | பாதுகாப்பு சேவைகள் | |
| S-03 | பந்தல் மற்றும் அலங்காரம், ஒலி, ஒளி சேவைகள் | |
| S-04 | படப்பிடிப்பு சேவைகள் | |
| S-05 | குளிரூட்டிகள், வளிபதனாக்கிகள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | |
| S-06 | போட்டோ பிரதி இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், கணினி அச்சியந்திரங்கள், கணினி வலையமைப்பு முறைமை, உள்ளக தொலைபேசி அமைப்பு, CCTV என்பன திருத்தம் மற்றும் பராமரித்தல் | |
| S-07 | வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வாகனம் வழங்கல் (அரை சொகுசு பேரூந்து 54 ஆசனங்கள் / Hiace Van 14 ஆசனங்கள் - குளிரூட்டல் வசதியுடன் / சிறிய ரக்சி) | |
| S-08 | இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | |
| S-09 | இயந்திரங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | |
| S-10 | வாகனம் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | |
| S-11 | தளபாடங்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தல் | |
| S-12 | ஏனைய சேவைகள் | |

.........................
திகதி

...........................................
உரிமையாளர் ஒப்பமும் இறப்பர் முத்திரையும்